Government appoint a high Police official to find out exactly where this cottage industry is located and see that this sort of thing is prevented?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த அரிசியைச் சாப்பிட்டதனால் பல் போனதாகச் சொல்கிறார்கள். டாக்டருக்கே இந்தக் கதியானால் மற்றவர்களுக்கு எப்படி என்று சொல்ல வேண்டியதில்லை. அவர் எந்தக் கடையில வாங்கினார் என்று சொன்னால் நானே பரிசிலனை செய்து அந்த மாதிரிக் கற்களை அரிசியில் கலந்து கொடுக்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Courts

* 422 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Government are aware of the fact that Courts of both Madurai and Ramanathapuram districts are housed now in Tirumalnaick Palace, Madurai; and

(b) if so, the arrangements made to shift them to new and safer buildings both at Madurai and at Ramanathapuram towns?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஒரேயிடத்தில் தகுந்த கட்டிடங்கள் கிடைக்கும் வரை, தற்போது திருமலைநாயக்கர் மஹாலில் உள்ள நீதிமன்றங்களை தனியார் வாடகைக் கட்டிடங்களுக்கு மாற்றுவது ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. மதுரையில் "செங்குளம்" குளக்கரையில் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நீதிமன்றங்களை ஒருசேர இணைத்து ஒரே நீதிமன்றமாக அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கே. விநாயகம் : மதுரை மாவட்ட நீதிமன்றமும் இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றமும் ஆகிய இரண்டுமே இப்பொழுது திருமலைநாயக்கர் மஹாலில் இருப்பதாகவும், அந்த மஹால் இப்பொழுது ஏதோ ஓட்டை அடைந்து விட்டதனாலே, அது கூட, 'அன்ஃபிட் ஃபர் ஹௌஸிங் தி கோர்ட்ஸ்' என்று சொல்லி, அந்த இரு நீதி மன்றங்களையும் மதுரையில் ஏதோ ஒரு வாடகைக் கட்டிடத்திலே வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். இராமநாதபுரம் மாவட்ட நீதி மன்றத்தை இராமநாதபுரத்திலேயே வைக்க, இராமநாதபுரத்தில் வாடகைக் கட்டிடம் கிடைக்காதா ? ஏன் இது பல ஆண்டுகளாக மதுரை மாவட்டத்திலேயே இருக்கிறது ? அது மாதிரி இருக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா நீதிமன்றங்களும் மதுரையில் இல்லை. மாவட்ட நீதி மன்றம் ஒன்று இருக்கிறது. சில பகுதிகளுக்குத் துணை நீதி மன்றம் ஒன்று இருக்கிறது. புதிய துணை நீதி மன்றம்

1967 நவம்பர் 24]

வேண்டுமென்றால் உயர் நீதிமன்றம் அதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மதுரை மாவட்டம் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றங்கள்தான் ஏராளமாக அந்த மஹாலிலே இருந்தன. அந்த மஹாலுக்கு ஆபத்து என்று இப்பொழுது அல்ல, பல ஆண்டுகளாகவே கூறப்பட்டு வருகின்றது. அந்த மஹாலை செப்பனிட மத்திய அரசும் பண உதவி செய்ய முன் வந்திருக்கிறது. ஆகவே, நீதி மன்றங்களுக்காகத் தனியாகவே புதுக் கட்டிடத்தைக் கட்ட உத்தேசித்து இருக்கிறோம். அப்பொழுது எல்லா நீதிமன்றங்களையும் அந்தப் புதிய கட்டடத்திற்குக் கொண்டு வந்து அதை மஹாலை சரித்திரப் பிரசித்தி பெற்ற இடமாக ஆக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

*423 வின—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் புது கோர்ட் கட்டடங்கள் கட்டுவதற்கான இடம் தீர்மானிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆம் எனில், இக் கட்டடங்களுக்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டுவிட்டதா ?

(உ) எஸ்டிமேட் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(a) Yes, at Sengulam Tank Bed, **Madurai.**

(b) Yes.

(c) About Rs. 35 lakhs.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்தப் புதிய கட்டிடத்திலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கான அத்தனை கோர்ட்டுகளும் இருக்குமா ? அல்லது மதுரை மாவட்டத்திற்கு மட்டும் அதிலே செயல்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னரே கூறியபடி இராமநாதபுரம் என்று சொல்லும்போது சில நீதிமன்றங்கள் தான் மதுரையிலே இருக்கின்றன. அந்த நீதிமன்றங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படும் வரை இதே கட்டிடத்தில் தான் இருக்கும்.

*424 வின—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் ஒரு முன்சீப் கோர்ட் ஆரம்பிப்பதற்கான உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்போது அது எந் நிலையில் இருக்கின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.